DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THOOTHUKUDI.

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>(Chapter.. | ... | DEPOSITION OF WITNESS |
| Preliminary Register | ... | Case No. S.C.No.260/2024 |
| Sessions | ... | |
| Deposition of witness for | | Prosecution - P.W.17<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | S.செந்தில்வேல்குமார் |
| Father's Name | த/பெ.D.சுப்பிரமணியன் |
| Village | ஸ்ரீவைகுண்டம் |
| Taluk | |
| Age | 49 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.03.2026.

**(3, 5, 6 எதிரிகள் ஆஜர். 1, 2, 4 எதிரிகள் ஆஜர் இல்லை. 1, 2, 4 எதிரிகளின் வருகையின்மைக்கு கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.)**

**முதல் விசாரணை :–**

நான் தற்போது ஸ்ரீவைகுண்டம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு முத்தையாபுரம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது 20.04.2024 ம் தேதி அதிகாலை 00.30 மணிக்கு முத்தையாபுரம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் சுந்தரம் என்பவர் முத்தையாபுரம் ராமஜெயம் மகன் வேல்ராஜ் என்பவரின் இன்டிமேசனை பெற்று அதன்மூலம் புகார்மனு ஒன்றை பெற்று நிலையம் வந்து அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.131/2024 இதச பிரிவுகள் 448, 307, 506(2), 147, 148, 294(பி)

மற்றும் 3(1) of TNPPDL Act ன் கீழ் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையை கனம் குற்றவியல் நீதிமன்றத்திற்கு அனுப்பியும் இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் விசாரணை நகலை எனது விசாரணைக்கு வைத்துள்ளார். தூத்துக்குடி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவல் **அ.சா.ஆ.22 வரிசை**. முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.23.**

மேற்படி வழக்கு கோப்பை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் அதிகாலை 06.00 மணிக்கு சென்று சாட்சிகள் பாரத் மற்றும் பிரவீன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளேன். மாதிரி வபைடம் **அ.சா.ஆ.24.** அதே சாட்சிகள் முன்னிலையில் உடைந்த கண்ணாடி துண்டுகளை அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றியுள்ளேன். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.25.** பின்னர் சாட்சிகளின் 161(3) வாக்குமூலம் தனித்தனியே பதிவு செய்தேன்.பின்னர் சாட்சிகள் அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த சாட்சி வேல்ராஜ், பிரேம்குமார், சதீஷ்குமார், ஆத்தியப்பன், ஜெமின் என்ற முகம்மது ஜெமின், அரவிந்த் கணேஷ், உதவிஆய்வாளர் சுந்தரம் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளேன். சம்பவம் உண்மையென தெரிந்ததால் 22.04.2024 ம் தேதி காலை 10.00 மணிக்கு தூத்துக்குடி – மதுரை பைபாஸ் ரோட்டில் FCI குடோன் அருகே வாகன தணிக்கை செய்தபோது TN 76 AX 2246 Passion Pro என்ற இருசக்கர வாகனத்தில் வந்த நபரை மடக்கி பிடித்து விசாரித்தபோது அந்த நபர் ஹரிசிங் என்பதும் அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை காலை 10.30 முதல் 11.30 மணி வரை பதிவு செய்து அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின்

அடிப்படையில் சம்பவத்திற்கு பயன்படுத்திய இரு சக்கர வாகனத்தை 11.30 மணி முதல் 12.00 மணி வரை சாட்சிகள் காளிமுத்து, சதீஷ்குமார் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.26.** அத்தாட்சி **அ.சா.ஆ.27.** (அ.சா.ஆ.26 கணிணி மூலம் உருவாக்கப்பட்ட ஆவணம் என்பதால் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65பி-யின்படியான சான்றிதழ் தாக்கல் செய்யப்படவில்லை என்ற ஆட்சேபணையின்பேரில் குறியீடு செய்யப்பட்டது.)

பின்னர் 23.04.2024ம் தேதி காலை 06.00 மணிக்கு தூத்துக்குடி - திருச்செந்தூர் ரோட்டில் மதிகெட்டான் பாலம் அருகே வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தபோது TN 69 BL 1038 Hero Splendar Plus என்ற இருசக்கர வாகனத்தில் வந்த நபர்கள் போலிஸ் பார்ட்டியை கண்டதும் தப்பியோட எத்தணித்தவர்களை பிடித்து விசாரித்தபோது தனது பெயர் பூபதிராஜ் என்றும் தூத்துக்குடி மாவட்டம் குலையன்கரிசல் மேலத்தெரு என்றும் கூறி இவ்வழக்கின் குற்றத்தை ஒப்புக்கொண்டவரை எந்தவித அச்சுறுத்தலும் துன்புறுத்தலும் இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ஜோசப் மற்றும் பெருமாள் ஆகியோர் முன்னிலையில் காலை 06.30 மணி முதல் 07.30 மணி வரை கணிணியில்(Laptop) பதிவு செய்து அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின்அடிப்படையில் எதிரி சம்பவத்திற்கு பயன்படுத்திய TN 69 BL 1038 Hero Splendar Plus என்ற இருசக்கர வாகனத்தை காலை 07.30 மணி முதல் 08.00 மணி வரை அத்தாட்சி தயார் செய்து அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற

காவலுக்கு அனுப்பி வைத்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.28.** அத்தாட்சி **அ.சா.ஆ.29.** (அ.சா.ஆ.28 கணிணி மூலம் உருவாக்கப்பட்ட ஆவணம் என்பதால் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65 பி-யின்படியான சான்றிதழ் தாக்கல் செய்யப்படவில்லை என்ற ஆட்சேபணையின்பேரில் குறியீடு செய்யப்பட்டது.)

மேலும் இவ்வழக்கில் எதிரிகளை தேடி போலிஸ் பார்ட்டி சகிதம் தூத்துக்குடி - மதுரை பைபாஸ் ரோட்டில் 02.05.2024 ம் தேதி காலை 09.00 மணிக்கு மீன்வளக்கல்லூரி அருகே வரும்போது TN 69 AK 5916 Bullet என்ற இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த 2 நபர்கள் போலிஸ் பார்ட்டியை கண்டதும் தப்பியோட முயன்றவர்களை மடக்கி பிடித்து விசாரித்தபோது 1. சக்திவேல் வயது 24 த/பெ.முருகன், குலையன்கரிசல் மற்றும் 2. ரமேஷ்ரேவிந்த் வயது 24 த/பெ.ஆறுமுகம், அம்மன்கோவில் தெரு, குலையன்கரிசல் ஆகியோர்களை விசாரித்தபோது இவ்வழக்கின் குற்றத்தை ஒப்புக்கொண்டவரை காரணம் கூறி கைது செய்து அவர்கள் தானாக எவ்வித துன்புறுத்தலும் இன்றி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை கார்த்திக், விக்னேஷ் ஆகியோர் முன்னிலையில் காலை 09.30 மணி முதல் 10.30 மணி வரை லேப்டாப்பில் பதிவு செய்து வாகனத்தில் இருந்த பிரிண்டரில் நகல் எடுத்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் காலை 10.30 மணி முதல் 11.00 மணி வரை குற்ற சம்பவத்தில் ஈடுபட்டு சம்பவத்திற்கு பயன்படுத்திய TN 69 AK 5916 Bullet என்ற இருசக்கர வாகனத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.30.** அத்தாட்சி **அ.சா.ஆ.31.** (அ.சா.ஆ.30 கணிணி மூலம் உருவாக்கப்பட்ட ஆவணம்

என்பதால் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65பி-யின்படியான சான்றிதழ் தாக்கல் செய்யப்படவில்லை என்ற ஆட்சேபணையின்பேரில் குறியீடு செய்யப்பட்டது.)

அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி கூறியபடி எதிரி சக்திவேல் தன்னை கூட்டிச்சென்றால் மறவன்மடத்தில் உள்ள ரமேஷ்ரேவந்த் மாமனார் வீட்டின் பின்புறமுள்ள முட்புதரின் மறைவில் மறைத்து வைத்திருந்த அருவாளை மறவன்மடம் 11.30 மணிக்கு சென்று அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினேன். அத்தாட்சி **அ.சா.ஆ.32**. படிவம் 91 **அ.சா.ஆ.33 வரிசை** (5 எண்ணம்). பின்னர் எதிரி மற்றும் சொத்துக்கள் சகிதம் நிலையம் வந்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் 17.05.2024ம் தேதி மதியம் 14.00 மணிக்கு அத்திமரப்பட்டி ஊருக்கு மேற்கே உள்ள வாழை தோட்டத்திலிருந்து குலையன்கரிசல் செல்லும் ரோட்டிற்கு நடந்து வந்த 2 நபர்களை போலிஸ் பார்ட்டி சகிதம் மடக்கி பிடித்து விசாரிக்க தனது பெயர் ஜெயந்த்குமார் என்ற ஜெயந்த் த/பெ.ஜெயக்குமார், அம்மன்கோவில் தெரு, குலையன்கரிசல் என்றும் உடன் வந்த மற்றொரு நபர் அபிலாஷ்வர்மா என்ற அபி த/பெ.ஜெபக்குமார், காமராஜர் தெரு, புதுக்கோட்டை ஆகியோர்களை மடக்கி பிடித்து விசாரித்தபோது முத்தையாபுரம் காவல் நிலைய குற்ற எண்.131/2024 மற்றும் 163/2024 ஆகிய வழக்குகளில் சம்பந்தப்பட்டிருப்பது தெரியவந்தது.

எனவே காரணம் கூறி 14.15 மணிக்கு மேற்படி எதிரிகளை கைது செய்து விசாரித்தபோது எதிரிகள் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 14.15 மணி முதல் 15.15 மணி வரை சாட்சிகள் பிரதீப் மற்றும்பாலசுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில் மடிக்கணிணியில்

பதிவு செய்து வாகனத்தில் இருந்த பிரிண்டரில் பிரிண்ட் எடுத்து எதிரிகளிடம் கையொப்பம் பெற்றேன். அதன் அடிப்படையில் எதிரிகள் சம்பவத்திற்கு பயன்படுத்திய அருவாளை 15.15 மணிக்கு எதிரி ஜெயந்த்குமார் என்ற ஜெயந்த் என்பவரிடமிருந்து அதே சாட்சிகள் முன்னிலையில் முத்தையாபுரம் காவல் நிலைய குற்ற எண்.163/24 என்ற வழக்கில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி உண்மை நகல் **அ.சா.ஆ.34**. பின்னர் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்ற பாதுகாப்பிற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் 21.07.2024 ம் தேதி சாட்சிகள் அரவிந்தகணேஷ், சேதமதிப்பு வழங்கிய முத்துராஜ், வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் N.C.சுமதி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். 21.07.2024 அன்று சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயாரித்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.35**.

பின்னர் வழக்கின் விசாரணையை முடித்து அன்றையதினமே எதிரிகள் மீது பிரிவு 147, 148, 448, 294(பி), 307, 506(2) இதச மற்றும் 3(1) of TNPPDL Act உ/இ 34 இதச படி குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். எனது விசாரணையில் அ.சா.1 முதல் 10, அ.சா.13, 16 வரையான சாட்சிகள் அவர்களது வாக்குமூலத்தில் சொன்னதுபோல் கூறியுள்ளார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>

நான் மடிக்கணிணி மற்றும் பிரிண்டர் பயன்படுத்துவதற்கு உயர் அதிகாரிகளிடம் அனுமதி பெறவில்லை என்றால் சரிதான். தூத்துக்குடி –

மதுரை ரோட்டில் FCI குடோன் எங்குள்ளது என்றால் தூத்துக்குடி கலெக்டர் அலுவலகம் கீழ்புறம் உள்ளது. அது தென்பாக காவல் நிலைய சரகம். மீன்வளக்கல்லூரி தென்பாக காவல் நிலைய சரகம் என்றால் சரிதான். முத்தையாபுரம் காவல் ஆய்வாளராகிய நான் தென்பாக காவல் நிலைய எல்லைக்குட்பட்ட FCI குடோன் அருகில் வாகன தணிக்கை செய்ய உயர் அதிகாரிகளின் எழுத்துமூலமான அனுமதி இருக்கிறதா என்றால் இவ்வழக்கின் எதிரிகள் மேற்படி இடத்திற்கு வருவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் உயர் அதிகாரிகளுக்கு தெரிவித்து சம்மதம் பெற்று அந்த இடத்திற்கு சென்றோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் உயர் அதிகாரிகளிடம் அனுமதி பெற்றதாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தில் எந்த இடத்திலும் உயர் அதிகாரிகளிடம் அனுமதி பெற்றதாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல.

ஒப்புதல் வாக்குமூலத்தை எந்த காவலர் தட்டச்சு செய்தார் என்று அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் காணப்படவில்லை என்றால் சரிதான், வழக்கமாக எழுத்தர் தட்டச்சு செய்வார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சொல்ல சொல்ல தட்டச்சு செய்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் ஜெயந்த் என்ற ஜெயந்த்குமாரின் ஒப்புதல் வாக்குமூலத்தின் ஜெராக்ஸை தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான், இதன் அசல் ஒப்புதல் வாக்குமூலம் மற்றொரு வழக்கான குற்ற எண்.163/2024 ல் தாக்கல் செய்துள்ளேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் குற்ற எண்.163/2024 ல் தாக்கல் செய்துள்ளதாக குறிப்புகள் இல்லை என்றால் சரிதான், வழக்கு கோப்புகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்தில் 20.04.2024 ல் தயார் செய்து 22.04.2024 இரவு 09.00 மணிக்கு

வந்தடைந்துள்ளது என்றால் சரிதான். இடைப்பட்ட காலத்தில் அந்த முதல் தகவல் அறிக்கை யார் வசம் இருந்தது என்றால் நிலைய எழுத்தர் வசம் இருந்தது. முதல் தகவல் அறிக்கையில் காலம் 15ல் 20.04.2024ல் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக துலங்கும் என்றால் சரிதான். அதில் யார் மூலம் அனுப்பப்பட்டது என்ற குறிப்புகள் இல்லை என்றால் வழக்கமாக எழுதப்படுவது இல்லை.

குற்ற அறிக்கை 21.07.2024 அன்று தயாரிக்கப்பட்டு 27.09.2024 அன்றுதான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இடைப்பட்ட காலத்தில் இறுதி அறிக்கை யார் வசம் இருந்தது என்று சொல்ல இயலாது என்றால் சரியல்ல, வழக்கமாக குற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டு E filing செய்து கோப்புகள் சரிபார்க்கப்பட்டு எல்லாம் சரியான பின்புதான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும். 27.09.2024 அன்றுதான் குற்ற அறிக்கை E filing மூலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் நான் ஆகஸ்ட் மாத தொடக்கத்திலேயே பணி மாறுதலில் சென்றுவிட்டதால் அது பற்றி எனக்கு தெரியாது. குற்ற இறுதி அறிக்கையை யார் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது என்றால் வழக்கமாக நீதிமன்ற காவலர் நீதிமன்றத்தில் கொடுப்பது வழக்கம். இந்த வழக்கில் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எங்கள் காவல் நிலையத்தில் பொட்டல்காடு அருகே மது விற்பனை செய்வது சம்பந்தமாக யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. மதுபானம் விற்பது குறித்து எங்கள் காவல் நிலைய எல்கைக்குள் விற்பது குறித்து வேறு நபர்கள் 19.04.2024 அன்று தேர்தல் நடைபெறும் சமயத்தில் பல்வேறு புகார்கள் தெரிவிக்கப்பட்ட காரணத்தினால் அப்போது பாதுகாப்பு

பணியில் இருந்த காவலர்களால் அடித்து உடைக்கப்பட்ட கடை குறித்தான இந்த வழக்கினை போலி ஆவணங்கள் தயாரித்து எதிரிகள் மீது பொய்யாக இந்த வழக்கு புனையப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் 6 வது எதிரியை கைது செய்த இடம் கிழமேல் ரோடா தென்வடல் ரோடா என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் திசை குறிப்பிடவில்லை, சாலையை குறிப்பிட்டுள்ளேன். 6 வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி பின்னிட்டு உருவாக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை - இல்லை.</u>**

**ஒம்/-R.V.ராஜகுமார்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**தூத்துக்குடி.**